


திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம், மாவட்ட கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில் மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் தலைமையில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக மறுசீரமைப்பு குழு உறுப்பினர்கள் கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் இசை சிறப்புரையாற்றினர். இதில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட கழக சார்பு அணிகளின் தலைவர், துணை தலைவர்கள், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கோவை என்.கே.ஸ்போர்ட் அகாடமி சார்பில், தடாகம் பிரதான சாலை, ஆர்.எஸ்.புரம், ஏ.கே.ஸ்கொயர்'ல் அமைந்துள்ள 5 ஃபிட்னெஸ் உடற்பயிற்சி சென்டரில் நடைபெற்ற நிகழ்வில் அச்சீவர்ஸ் "தடகளப் பயிற்சி மைய சர்வதேச, தேசிய விளையாட்டு வீரர்கள், மற்றும் பள்ளி, கல்லூரி விளையாட்டு வீரர்களுக்கு ரூபாய் 70,000 (எழுபதாயிரம்) மதிப்பிலான டீசர்ட், மற்றும் போட்டிக்குரிய விளையாட்டு உபகரணங்களை கழக தீர்மானக்குழு செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் வழங்கினார். இதில் தேசிய தடகளப் பயிற்சியாளர் நிஜாமுதீன், தமிழ் இனியன், சர்வதேச, தேசிய தடகள வீரர்கள் கலந்து பலர் கொண்டனர்.

### கடல் சீற்றத்தால் பாதிக்கப்படும் மீனவர்களைப் பாதுகாத்திடுக!

# குளச்சல் மீன்பிடித் துறைமுகம் விரிவாக்கப் பணியை விரைந்து முடித்திடுவீர்!

## சட்டப்பேரவையில் எஸ்.ஆஸ்டின் கோரிக்கை!



சென்னை, செப்.6-

சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் எஸ்.ஆஸ்டின் பேசுகையில் குளச்சல் மீன்பிடித் துறைமுகம் விரிவாக்கப் பணியை விரைந்து முடித்திட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் எஸ்.ஆஸ்டின் பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே, அழிக்கால், பிள்ளைத்தோப்பு மீனவர் கிராமங்கள் மற்றும் குளச்சல் மீன்பிடித் துறைமுகம் EXTENSION இவை இரண்டு குறித்தும், நம்முடைய மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு தெளிவாகத் தெரியும். குளச்சல் மீன்பிடித் துறைமுகம் EXTENSIONஐப் பொறுத்தவரையில், அடிக்கல் நாட்டப்பட்டு கிட்டத்தட்ட 8 மாதங்கள் ஆகிவிட்டன.

நம்முடைய உயர் அதிகாரிகள் அனைவரும் பணியைத் தொடங்குவதற்கான வாய்மொழி உத்தரவைக் கொடுத்துவிட்டார்கள். ஆனால், இதுவரைக்கும் மாவட்டத்தில் உள்ள அதிகாரிகளுக்கு அந்த தகவல் OFFICIAL ஆக சென்று சேராத காரணத்தினால், மேல் அதிகாரிகளினுடைய உத்தரவு சரியாக, OFFICIAL ஆக மாவட்டத்தில் உள்ள மீன்வளத் துறை அதிகாரிகளுக்கு சென்று அடையாத காரணத்தினால், அந்தப் பணிகள் இன்னும் துவங்கப்படாமல் 8 மாத காலங்கள் ஆகிவிட்டன.

எனவே, அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டத்தொடர் முடிந்து, நாளைய தினமே அந்தப் பணியைத் தொடங்குவதற்கான உத்தரவை நீங்கள் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அழிக்கால், பிள்ளைத்தோப்பு மீனவர் கிராமங்கள் தொடர்ந்து கடல் சீற்றத்தால் பாதிக்கப்பட்டு வருகின்றன. மீனவர்கள் பாதிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பாதுகாப்புக்காக, கிட்டத்தட்ட 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு அரசுக்கு வந்திருக்கின்றது.

இந்த அறிவிப்பில் இது குறித்து வரும் என்று எதிர்பார்த்தோம். நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர், நம்முடைய பொறுப்பு அமைச்சர் ஆகியோர் அறிவிப்பில் வரும் என்று அவர்களுக்கு உத்தரவாதம் கொடுத்திருந்தார்கள், வரவில்லை. இருந்தாலும், பரவாயில்லை. அதிகாரிகளுக்கு உத்தரவாதம் கொடுத்திருக்கின்றார்கள். உடனடியாக, இந்த கூட்டத்தொடர் முடிந்தவுடனே அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள்.

அமைச்சர் அவர்கள் இந்த இரண்டு கோரிக்கைகளுக்கும், நீங்கள் ஒரு உத்தரவாதத்தை கொடுத்துவிட்டீர்கள் என்றால், அந்த மீனவர்கள் உங்கள் மீது நம்பிக்கையாக இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வாறு எஸ்.ஆஸ்டின் பேசினார்.

### தலைமைக் கழகப் பிரதிநிதிகள் இரா.கிரிராஜன் எம்.பி. – அழகிரி சதாசிவம் முன்னிலையில்

# சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!



சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழுக் கூட்டம் வருகிற (09.09.2026 - புதன்கிழமை) காலை 10.00 மணியளவில், சங்ககிரி பவானி மெயின் ரோட்டில் உள்ள, "ஸ்ரீ வாசுதேவ் மஹால் திருமண மண்டபத்தில்", மாவட்ட கழக அவைத் தலைவர் பி.தங்கமுத்து தலைமையில், தலைமைக் கழகப் பிரதிநிதிகள் இரா. கிரிராஜன் எம்.பி., மற்றும் அழகிரி சதாசிவம் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, மாநில நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள் - முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு மீனவர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்று சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:-

1) 22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் கழக தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி நகர, ஒன்றிய, பேரூர் கழக மறுசீரமைப்பு குறித்து,

2) கழக ஆக்கப் பணிகள் குறித்து.

**டி.எம்.செல்வகணபதி எம்.பி.,**
செயலாளர், சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.

### முன்னாள் எம்.பி. சா.ஞானதிரவியம், வ.து.ந. ஆனந்த் பங்கேற்பு!

# தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!



தென்காசி.செப்.6 -

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (06.09.2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணி அளவில் சங்கரன்கோவில் ஏ.வி.ஆர்.எம்.வி. திருமண மஹாலில் சங்கரன்கோவில் மற்றும் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. செயற்குழுக் கூட்டம் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் தலைமைக் கழக பிரதிநிதிகள் முன்னாள் எம்.பி. சா.ஞானதிரவியம், வ.து.ந.ஆனந்த் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

என தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (6 ம் தேதி ஞாயிறு) மாலை 4 மணி அளவில் சங்கரன் கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள ஏ.வி.ஆர்.எம்.வி திருமண மஹாலில் எனது தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தலைமைக் கழக பிரதிநிதிகள் சா.ஞானதிரவியம் (முன்னாள் எம்பி) வ.து.ந.ஆனந்த் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

எனவே தென்காசி வடக்கு மாவட்டக் கழகத்திற்கு உட்பட்ட சங்கரன்கோவில் மற்றும் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஈ.ராஜா எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

### இரா.கிரிராஜன் எம்.பி. – அழகிரி சதாசிவம் முன்னிலை!

# சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. வேண்டுகோள்!



சேலம், செப். 6-

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

சேலம் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாளை (07-09-2026 - திங்கள்கிழமை) காலை 10.00 மணிக்கு வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க. ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட்ட கழக அவைத் தலைவர் மு.ரா.கருணாநிதி அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தலைமைக் கழகப் பிரதிநிதிகளான, கழக சட்டத்திட்டத் திருத்தக்குழு செயலாளர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன், MP மற்றும் கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் அழகிரி சதாசிவம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர், கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணி அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: கழக முப்பெரும் விழா

22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் கழக தலைவர் தலைமையில் நடைபெற்ற தலைமை செயற்குழுக்கூட்டத்தில் கழக நிர்வாக மறுசீரமைப்பு தீர்மானத்தின்படி ஒன்றிய, நகர, கழகம் மறுசீரமைப்பு குறித்து,

கழக வளர்ச்சி பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### டி.யு.சி.எஸ். திராவிட தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சார்பில்

# டி.யு.சி.எஸ். நிர்வாகச் சீர்கேட்டைக் கண்டித்து கண்டனக் கூட்டம்!

## சுந்திரமூர்த்தி தலைமையில் இராஜன் சாமிநாதன் முன்னிலையில் நடைபெற்றது!

சென்னை, செப்.6-

பழம் பெருமைமிக்க சென்னை டி.யு.சி.எஸ். என அனைவராலும் அழைக்கப்படும் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு பண்டக சாலை என்பது 1904ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது நுகர்வோர் கூட்டுறவு சங்கமாகும். சென்னை மக்களுக்கு ரேஷன் பொருள்கள், மளிகை பொருள்கள், எரிவாயு சிலிண்டர், பெட்ரோல் மற்றும் டீசல், காய்கறி, மருந்துகள் என அனைத்து வகைகளிலும் தனது கிளைகள் ரேஷன் கடைகள் 251, எரிவாயு கிளைகள் 12, மருந்து கிளைகள் 10, முதல்வர் மருந்தகம் 1, பண்ணை பசுமை கடைகள் 5, மளிகை பிரிவுகள் 5, பெட்ரோல் வழங்கு நிலையங்கள் 3 என்ற எண்ணிக்கைகள் அமைந்த விற்பனை பிரிவுகள் மூலம் தரமாகவும், விலை குறைவாகவும் சென்னை வாழ் மக்களுக்கு வழங்கி வந்த நிலையில்,

தற்சமயம் கடந்த ஜூலை மாதம் 2026க்கு பிறகு, நிறுவனத்திற்கு வந்த புதிய கூடுதல் பொறுப்பு செயலாட்சியர் திருமதி. ஆர்.வி. காவேரி அவர்கள் தனது பொறுப்பு தெரியாமல் இந்நிறுவனத்தின் அலுவலர்களாக இருந்து வரும் திருமதி. ஜி.தெய்வநாயகி மற்றும் கு. தமிழ்வாணன் என்ற துணை அலுவலர்களோடு இணைந்து நிர்வாக சீரழிவு ஏற்படுத்துகிறார். இதனால் விற்பனை பெரும் வீழ்ச்சியாகி பணியாளர்களுக்கு ஊதியம் தர முடியாத அவல நிலை மிக விரைவில் வரும் என்ற நிலையுள்ளது.

இது குறித்து மனு கொடுத்தும், நடவடிக்கை கோரியும் எந்த நடவடிக்கையும் எடுக்காமலும் தமது இஷ்டத்திற்கு கலந்தாய்வு எதுவும் செய்யாமல் 450 பணியாளர்களுக்கும் மேற்பட்டவர்களுக்கு பணி இடமாறுதலை தினசரி செய்து வருவதும் நிறுவனத்தின் வளர்ச்சிக்கென எந்த முயற்சியும் செய்யாமல் கோப்புகளை தேக்கம் ஆக்கி நிர்வாக சீரழிவு செய்வதும் விற்பனையில் ஆர்வம் காட்டாமல் டி.யு. சி.எஸ் விற்பனை மையத்தினை வங்கி போல் செயல்பட வைக்க நினைப்பதும் கூடுதல் பொறுப்பு செயலாட்சியரின் தினசரி பணியாக இருந்து வருகிறது.

இதனால் பெருமளவில் நிதி நலிவை நோக்கி போகும் டி.யு.சி.எஸ் நிறுவனத்தை காத்து தொழிலாளர்களின் நலன்களை காத்திட டி.யு.சி.எஸ். திராவிட தொ.மு.ச. சார்பில் பேரவையின் அனுமதியோடு 03.09.2026 அன்று மதியம் 01.30 மணி முதல் 02.30 மணி வரை தலைமையக வாயிலில் கண்டன கூட்டம் நடைபெற்றது.

இந்த டி.யு.சி.எஸ். தொ.மு.ச. சார்பில் நடந்த கண்டன வாயிற்கூட்டம் தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் பொதுச்செயலாளர் சுந்திரமூர்த்தி தலைமையில் டி.யு.சி. எஸ். தொ.மு.ச. செயலாளர் இராஜன் சாமிநாதன் முன்னிலையில் நடந்தது. இதில் எம்.இராஜசேகர், என்.பிரபாகரன், கே.கதிரவன், கே.மலர்மன்னன், முத்துசெல்வன், கோகுல், பேபிஷாலினி, சுமித்திரா, சதிஷ்குமார், மருதமலை, கஜேந்திரன், லோகநாதன், சரவணன், முருகேசன் உள்ளிட்ட ஏராளமான தொ.மு.ச. வினர் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் அறிக்கை!



திருவாரூர், செப். 6-

திருவாரூர் மாவட்டச் செயற்குழுக் கூட்டம் 06.09.2026 ஞாயிறு இன்று நடைபெற இருக்கிறது. இதுகுறித்து மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருவாரூர் மாவட்ட கழகச் செயற்குழுக் கூட்டம் மாவட்ட கழக அவைத்தலைவர், க.தன்ராஜ் அவர்கள் தலைமையிலும், தலைமைக் கழக பிரதிநிதிகள் இள.புகழேந்தி மற்றும் தமிழன்பிரசன்னா ஆகியோரது முன்னிலையிலும் இன்று (06.09.2026. ஞாயிற்றுகிழமை) காலை 10.00 மணி அளவில் திருவாரூர் விளமல் குவைத் பேலஸ் அரங்கத்தில் நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டச்சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் மாவட்டக் கழக பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். 16வது அமைப்புத்தேர்தல் நிர்வாக மாற்றங்கள் மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்த பொருள்களில் நடைபெறும் கூட்டத்திற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



டி.யு.சி.எஸ். தொ.மு.ச. சார்பில் நடந்த கண்டன கூட்டம் தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் பொதுச்செயலாளர் சுந்தரமூர்த்தி தலைமையில் டி.யு.சி.எஸ். தொ.மு.ச. செயலாளர் இராஜன் சாமிநாதன் முன்னிலையில் நடந்தது. இதில் எம்.இராஜசேகர், என்.பிரபாகரன், கே.கதிரவன், கே.மலர்மன்னன், முத்துசெல்வன், கோகுல், பேபிஷாலினி, சுமித்திரா, சதிஷ்குமார், மருதமலை, கஜேந்திரன், லோகநாதன், சரவணன், முருகேசன் உள்ளிட்டஏராளமான தொ.மு.ச.வினர் கலந்து கொண்டனர்.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கடலூர் கிழக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினரும், கிள்ளை பேரூர் செயலாளருமான எஸ். கிள்ளை ரவிந்திரன், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018.
நாள்: 04-09-2026.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.